**தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டம் - 2019**

தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஏப்ரல் 26 ஆம் திகதிய 2000001447 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் XI ஆம் உறுப்புரையின் 9.03(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் விவசாய ஏற்றுமதி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. செயற்திட்டப் பகுதியிலுள்ள தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களின் அதிக உற்பத்தி, இலாபத்தன்மை மற்றும் மீட்சியடையும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,502.08 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 65.40 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,349.28 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 25.76 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 39.63 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்க வங்கிகள் (PFIs), பயனாளிகள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றால் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஏப்ரல் 26 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 ஏப்ரல் 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் ஆரம்ப அமுல்ப்படுத்தல் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக பூரத்தியாக்கல் திகதி 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) மற்றும் செயற்திட்டக் கணக்காய்வுகள் தொடர்பான விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதிய வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) மீளப்பெறல் விண்ணப்பங்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மொத்த பணவளிப்புக்கள் ரூபா 819,982,081 ஆக காணப்பட்ட போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 820,094,436 ஆக பிழையாக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக ஆண்டிற்கான செலவினம் ரூபா 112,355 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | செலவினங்கள் அதிகரித்துக் காட்டப்படுதல். | இணங்கப்பட்டுள்ளது. இரண்டு கணக்குகளை இணக்கம் செய்த பின்னர் தவறு திருத்தம் செய்யப்படும். | தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட அரசாங்க பங்களிப்பு மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் தவறான கணக்கீட்டு நடைமுறை காரணமாக ரூபா 913,800 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்க பங்களிப்பு மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் குறைத்துக் காட்டப்படுதல். | இணங்கப்பட்டுள்ளது. | தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை, இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளினை வழங்குவதற்காக செயற்திட்ட நடவடிக்கைகள் 03 கூறுகளினை கொண்டிருந்ததுடன் 04 பங்குபற்றும் கடன் நிறுவனங்களினால் அமுல்படுத்தப்பட்ட கடன் திட்டங்களினூடாக நிதி வசதிகள் வழங்கப்படுகின்றன. ஆகையினால், மீள்நடுகை நோக்கங்களுக்காக காலி, மாத்தறை, இரத்தினபுரி, பதுளை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள தேயிலை சிறுநிலவுடமையாளர்களிற்கும் புதிய நடுகை நோக்கங்களுக்காக அம்பாறை மற்றும் மொனராகலையிலுள்ள இறப்பர் சிறுநிலவுடமையாளர்களுக்கும் உதவியளிப்பதற்காக செயற்திட்டத்தினால் துணைத் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட 03 கூறுகளின் செயன்முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் வடிவமைப்பு பூர்த்தியாக்கல் அறிக்கையின் பிரகாரம் 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது தெரிவுசெய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில் ஏற்கனவேயுள்ள தேயிலையை பிடுங்குவதன் மூலம் 5,500 ஹெக்டெயர் காணியை தயார்செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது வேலையெதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் 2017 தொடக்கம் 2019 வரையான ஆண்டுகளின் போது 1,452 ஹெக்டெயர் காணி மாத்திரமே தயார் செய்யப்பட்டிருந்தது. ஆகையால் 2019 ஆம் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடையப்பட்டிருக்கவில்லை. | 2019 யூன் மாதத்தின் IFAD MTR பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு மொத்த தேயிலை மீள்நடுகை இலக்கு 4,500 ஹெக்டெயர்கள் வரை குறைக்கப்பட்டிருந்தது. PDR இல் ஏற்பட்ட வடிவமைப்பு தவறு காரணமாக செயற்திட்டத்தை ஆரம்பிப்பதில் குறிப்பிடத்தக்களவு தாமதம், தொழில்நுட்ப சேவை வழங்குநரிடமிருந்து (TSHDA) மோசமான தொழில்நுட்ப உதவி | செயற்திட்டக் காலப்பகுதியினுள் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டில் 4,500 ஹெக்டெயர்களிற்கு மீள்நடுகை இலக்கை திருத்தம் செய்வதற்கு செயற்திட்டம் தீர்மானித்திருந்தது. எனினும் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் அவ் இலக்கை அடைந்துகொள்வதற்கு போதுமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க திட்டமிட்டவாறு செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு காலதாமதம் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | போன்றன காணப்பட்டன. | |
| (ஆ) | தேயிலை சிறுநிலவுடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் நிபந்தனையின் பிரகாரம் காணி அனுமதிக்காக முற்பணக் கொடுப்பனவை செலுத்திய பின்னர் இரண்டு ஆண்டுகளினுள் தேயிலை மீள்நடுகை செய்யப்பட வேண்டும். எனினும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 138 மில்லியன் முற்பணக் கொடுப்பனவு செலுத்தப்பட்ட 1,037 ஹெக்டெயர்களில் 58 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 610 ஹெக்டெயர்கள் மாத்திரம் 2019 ஆம் ஆண்டில் மீள்நடுகை செய்யப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடையப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முற்பணக் கொடுப்பனவின் பெரும்பகுதி 2017 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க அவற்றில் பெரும்பாலானவை 2018 மே – யூன் பருவகாலத்தில் தொடங்கப்பட்டிருந்தன. ஆகையால் 2019 ஆம் ஆண்டில் 610 ஹெக்டெயர்கள் மாத்திரமே மீள்நடுகை செய்யப்பட முடிந்திருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மானியத் திட்டத்தின் கீழ் 2017 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியின் போது ஆறு மாவட்டங்களில் 729.77 ஹெக்டெயர் மொத்தப் பரப்பில் தேயிலையை மீள்நடுகை செய்வதற்கு அனுமதிப்பத்திரங்களை பெற்றிருந்த 3,331 பயனாளிகள் காணி அளவையில் தாமதம், புல் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடையப்பட்டிருக்காததுடன் இது பயனற்ற கிரயமாக காணப்படுகின்றது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. அனைத்து முற்பண பெறுநர்களையும் (பணத்தை மீளப்பெற்றவர்கள் தவிர) உடனடியாக மீள்நடுகை செயன்முறைக்கு உள்வாங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | கள உத்தியோகத்தர்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விவசாயிகள் பயிரிடுவதற்கு ஊக்குவிக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடுகையில் தாமதம், திட்டத்திலிருந்து நடுகையாளர்கள் ஓய்வு பெறுதல் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்காமை போன்ற பல்வேறு காரணங்களால் ரூபா 109,263,440 முற்பண கொடுப்பனவை பெற்ற பின்னர் அவர்களது மானியக் கொடுப்பனவுகளை தொடர்ந்திருக்கவில்லை. | | | வேண்டும் இல்லாவிடின் முற்பணக் கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வேலைத் திட்டம் மற்றும் பாதீட்டின் பிரகாரம் செயற்திட்டம் 200 தேயிலை சங்கங்களில் 110 தேயிலை சங்கங்களை அவற்றின் சேவை விநியோக செயன்முறையை மேம்படுத்துவதற்கும், அவற்றின் வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், சிறந்த நடைமுறையை தொடர்வதை ஊக்குவிக்கவும் சங்கமொன்றிற்கு ரூபா 220,000 பெறுமதியான கருவித் தொகுதிகள் (tools kits) மற்றும் உபகரணங்களை விநியோகிப்பதற்கு தெரிவு செய்திருந்தது. மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 2019 பெப்ரவரியில் பெறுகை நடைமுறை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் செயற்திட்டம் தேயிலை சங்கங்கள் மீது பௌதீக செயன்முன்னேற்றம் எதனையும் அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | தேயிலை சங்கங்கள் அவற்றின் சேவை விநியோக செயன்முறையை மேம்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை செயன்முறை 2019 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இது பட்டியலிட்டவாறு 2020 பெப்ரவரி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. தெரிவுசெய்யப்பட்ட சங்கங்களிற்கான கருவிகள் மற்றும் உபகரண விநியோகம் 2020 மார்ச் மாத இறுதியளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக பெறுகைச் செயன்முறையை திட்டமிட்டவாறு பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் தாமதமின்றி திட்டமிடப்பட்ட காலப்பகுதியினுள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | செயற்திட்ட வடிவமைப்பு பூர்த்தியாக்கல் அறிக்கையின் | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் | செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டின் | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது தெரிவுசெய்யப்பட்ட இரண்டு மாவட்டங்களில் 3,000 ஹெக்டெயரில் இறப்பரை நடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 5,295 ஹெக்டெயர் காணியை செயற்திட்டம் இனங்கண்டிருந்த போதிலும் புதிய நடுகைக்காக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தால் 2,575 ஹெக்டெயர்களிற்காக மாத்திரம் நடுகைக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் விவசாயிகள் திட்டத்திலிருந்து ஓய்வு பெறுதல் மற்றும் ஏனைய பயிர்களிற்காக விவசாயிகள் மீளப்பெறுதல் போன்ற பல்வேறு காரணங்களினால் 2019 திசெம்பர் வரை 2,094 ஹெக்டெயர் காணியில் மாத்திரமே நடுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டம் இலக்கை முழுமையாக அடைந்திருக்கவில்லை. | அடையப்படவில் லை. | பெரும்போகத்தில் மீதி இலக்கை பூர்த்தி செய்வதற்கு ஏற்கனவே திட்டமிட்டு முன்னேற்றம் காணப்படுகின்றது. | செயற்திட்டக் காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 2019 செப்தெம்பர் 15 தொடக்கம் திசெம்பர் 15 வரையான காலப்பகுதியின் போது அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் முறையே 1,014 ஹெக்டெயர் மற்றும் 780 ஹெக்டெயரில் இறப்பர் செடிகளை பயிரிடுவதற்கு செயற்திட்டம் திட்டமிட்டிருந்தது. 2019 செப்தெம்பர் மாதத்திலிருந்து காணிகளிற்கு 925,704 செடிகளை போக்குவரத்து செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்த | இறப்பர் செடிகளை விநியோகிப்பதிலு ள்ள தாமதம் பயிர்செய்கை தோல்விக்கு வழிவகுக்க முடியும். | குறித்த மாவட்டங்களில் நடுகை பருவ காலத்தின் உச்ச நேரத்தில் கனமழை ஏற்பட்டதனால் நடுகை நிகழ்ச்சித்திட்டம் முற்றாக சேதமடைந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டவாறு முழு இலக்கையும் அடைய முடியாதிருந்தது. | பருவமழை ஏற்படுதல் மீது பயிர்ச்செய்கைக்கா ன அனைத்து நடவடிக்கைகளும் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| போதிலும் ஒரு மாத காலதாமதத்தின் பின்னர் 612,775 இறப்பர் செடிகள் மாத்திரமே போக்குவரத்து செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக செயற்திட்டம் 34 சதவீத மீதி இலக்கை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | | | |
| (எ) செயற்திட்டமானது 2019 பெரும்போகத்தின் போது மொனராகலை மாவட்டத்தில் 572.4 ஹெக்டெயரில் இறப்பரை பயிரிட்டிருந்ததுடன் விவசாயிகளிற்கு 886,075Kg கொம்போஸ்ட் உரத்தை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| (i) செடி விநியோகம் 2019 ஒக்தோபர் 12 இல் ஆரம்பிக்கப்பட்டு 2019 திசெம்பர் 15 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் செடி விநியொக காலப்பகுதியின் போது உரமெதுவும் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. ஆகையால் நடுகையின் போது மண்ணுடன் உரத்தை கலப்பதற்கான சாத்தியம் காணப்படவில்லை. | உரத்தை கலக்காமல் செடிகள் சரியாக வளராது. | 2019 பெரும்போகத்தின் போது கனமழை காரணமாக விவசாய காணிகளிற்கான கொம்போஸ்ட் விநியோகம் பல தடவைகள் பாதிப்படைந்திருந்தது. | அனைத்து செயற்திட்ட நடவடிக்கைகளும் உரிய காலத்தில் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) 572.4 ஹெக்டெயரிற்கு தேவையான கொம்போஸ்ட் உரம் 886,075Kg ஆக காணப்பட்ட போதிலம் விவசாயிகளிற்கு 747,475Kg மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. மேலும் 138,600Kg மீதி உரம் 89.5 | உரத்தை கலக்காமல் செடிகள் சரியாக வளராது. | பருவ மழை முடிவடைந்ததுடன் கொம்போஸ்ட் உர விநியோகம் மிளப்பட்டியலிடப்பட்டு விவசாயிகளிற்கு வழங்கப்பட்டது. | போதியளவு உரம் விவசாயிகளிற்கு உரிய நேரத்தில் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஹெக்டெயர்களிற்கு அல்லது 46,200 செடிகளிற்கு வழங்கப்பட முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஏ) செயற்திட்ட வடிவமைப்பு பூர்த்தியாக்கல் அறிக்கையின் பிரகாரம் தேயிலை பறித்தல் மற்றும் இறப்பர் வடித்தல் (rubber tapping) வரை வருமான இழப்பை மேவுகை செய்வதற்கு சுயதொழில் அல்லது குறுங்கால வருமானமீட்டும் நடவடிக்கைகளிற்காக கொமர்ஷல் வங்கி ஊடாக விவசாயிகளிற்கு கடன் வசதிகளை வழஙகுவதற்காக ரூபா 422.6 மில்லியன் தொகை ஒதக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 தொடக்கம் 2018 வரையான ஆண்டுகளின் போது கடன்வசதி அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வேலைத்திட்டம் மற்றும் பாதீட்டில் விவசாயிகளிற்கு ரூபா 20 மில்லியன் கடன் வசதிகளை வழங்குவதற்கு செயற்திட்டம் திட்டமிட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரை இது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெற்றிகரமாக செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டிருக்கவில்லை. | அமுல்ப்படுத்தல் தாமதமடைந்திருந்த செயற்திட்டத்தின் பிரதான கூறுகளில் ஒன்றாக செயற்திட்டத்தில் உள்ளடங்கிய கிராமிய நிதி கூறு உள்ளது. | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் தாமதமின்றி திட்டமிடப்பட்ட காலப்பகுதியினுள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 செயற்திட்டத்திற்கு வெளியேயான நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட்ட நிதி

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 8 மாவட்டங்களிலுள்ள செயற்திட்டம் மற்றும் செயற்திட்ட தலைமை அலுவலகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக பயன்படுத்துவதற்கு 2018 செப்தெம்பர் 04 இல் 10 டபிள் கெப் வாகனங்களை செயற்திட்டம் கொள்வனவு செய்திருந்தது. | செயற்திட்டம் மேலதிக கிரயத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக வரிசை அமைச்சிடமிருந்து அவ் வாகனத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான | செயற்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்கள் செயற்திட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| நுவரெலியா மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட கெப் வாகனமொன்று 2019 பெப்ரவரி 21 இல் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததன் விளைவாக நுவரெலியா மாவட்டத்தின் பயன்பாட்டிற்கு வாடகை அடிப்படையில் வாகனமொன்றை செயற்திட்டம் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,126,870 கூட்டுமொத்தமான வாடகை கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | | நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தது. | |

**3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| ஆண்டொன்றிற்கு 250,000 இறப்பர் செடிகளை வழங்கும் இயலளவுடன் அம்பாறை மாவட்டத்தின் பதியதலாவவிலுள்ள இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான இறப்பர் செடி நாற்றுக்களை அபிவிருத்தி செய்வதற்கு 2018 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியின் போது ரூபா 42 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலவிட்டிருந்தது. தண்ணீர் தொட்டி நிர்மாணம், நீர்ப்பசன முறைமை, மாதிரிப் பண்ணை, bud wood நாற்று, cut back நாற்று மற்றும் நடுகை தொடர்பான வீதி வலையமைப்பு என்பன 2018 திசெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ள போதிலும் இது ஓராண்டிற்கு மேலாக தாமதமடைந்திருந்ததால் மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட நடுகை இயலளவை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | ஆண்டென்றிற்கு 250,000 இறப்பர் செடிகளை வழங்கத் தவறியமை. | STaRR செயற்திட்ட உதவியின் கீழ் பதியதலாவ இறப்பர் செடி நாற்றுக்களின் அபிவிருத்தி பெறுகை நிறுவனமாகவுள்ள இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 70 சதவீத தண்ணீர் தொட்டி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | தேவையான இறப்பர் செடி உற்பத்தியை பூர்த்தி செய்வதற்கு நிர்மாண வேலைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 நிதிக் கட்டுப்பாடு மீதான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2019 திசெம்பர் மாதத்தில் இறப்பர் செடிகளை கொள்வனவு செய்து போக்குவரத்து செய்தமைக்காக செயற்திட்டத்தின் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்படாமல் ரூபா 2,015,806 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அச் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | காசு மீதி அதிகரித்தும் செலவினம் குறைத்தும் காட்டப்பட்டமை. | ஆண்டிறுதி அவசரத்தில் எழுதுநர் தவறு காரணமாக செலவினங்களை பதிவுசெய்வதிலுள்ள கவனக்குறைவு காரணமாக இச் சிக்கல் எற்பட்டிருந்தது. தவறு ஏற்கனவே திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் போது அனைத்து செலவினங்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டுக் கூறு மற்றும் அரசாங்க பங்களிப்பின் கீழ் 2019 ஆம் ஆண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 1,120 மில்லியன் தொகையை அரசாங்கம் ஒதுக்கீடு செய்திருந்த போதிலும் செயற்திட்டம் ரூபா 1,301.7 மில்லியன் (பயனாளிகள் மற்றும் வங்கி பங்களிப்பு இன்றி) பெறுமதியான செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வேலைத் திட்டம் மற்றும் பாதீட்டினை தயாரித்திருந்தது. ஆகையால் பாதீடு மற்றும் வருடாந்த வேலைத்திட்டம் என்பன 2019 ஆம் ஆண்டிற்கான நிதியளிப்பு ஒழுங்குகளை | பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்ட இலக்குகள் அடையப்பட முடியாதிருந்தன. | நிதி உடன்படிக்கை நிபந்தனைகளிற்கிணங்க புதிய ஆண்டிற்கான AWPB ஆனது IFAD இற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதுடன் உரிய நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 60 நாட்களிற்கு முன்னர் ஆட்சேபனை எதுவும் பெறப்படாது. செயற்திட்ட காலப்பகுதியின் போது ஆற்றப்பட வேண்டிய மீதி நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு PDR ஒதுக்கீட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டத்தின் AWPB பிரதானமாக | பாதீடு மற்றும் வருடாந்த வேலைத்திட்டம் என்பன நிதியளிப்பு ஒழுங்குகளை கருத்தில் கொண்டு முறையாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கருத்தில் கொண்டு முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. தேசிய பாதீட்டு அங்கீகாரத்தின் பின்னர் சனவரியில் ஆண்டிற்கான தேசிய பாதீட்டு ஒதக்கீடு GOSL (17) IFAD (12) சாதாரணமாக உறுதிப்படுத்தப்படுகின்றது. செயற்திட்டத்தின் முழு ஒதுக்கீடும் 2019.12.23 இற்கு பின்னர் தான் நிர்ணயிக்கப்பட்டது என்பது வெளிப்படையானது. நிதியளிப்பு ஒழுங்கை பொருட்படுத்தாமல் ரூபா 1,302 மில்லியனிற்கு (IFAD ரூபா 939.15 மில்லியன் மற்றும் GOSL ரூபா 362.71 மில்லியன் இரண்டிற்குமான) AWPB தயாரிக்கப்பட்டதுடன் ஒதுக்கீடுகள் மற்றும் தேவையான திரவத்தன்மை ரூபா 1,120 மில்லியனிற்கு பெறப்பட்டது. | |
| (இ) | மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மோசடிகள் மற்றும் தவறுகள் அதிகரிப்பதற்கான சாத்தியத்தன்மை. | வரிசை அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2019 செப்தெம்பரிலிருந்து வெற்றிடமாகவுள்ளது. | உள்ளகக் கணக்காய்வு தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |